
The Hindu (English)
Dated: 09.02.2024



# Kumawat made Additional Chief Electoral Officer

The Election Commission has posted IAS officer Shankar Lal Kumawat as the Additional Chief Electoral Officer in Tamil Nadu. Mr. Kumawat is a 2010-batch officer of the Tamil Nadu cadre. The Commission also posted IAS officer H.S. Srikanth as the Joint Chief Electoral Officer (IT), and P. Aravindan as the Joint Chief Electoral Officer (Systematic Voters Education and Electoral Participation). An official communication in this regard has been sent by the Commission to Chief Electoral Officer Satyabrata Sahoo.

Deccan Chronicle
Dated: 09-02-2024

# New appointments for election department

DC CORRESPONDENT
CHENNAI, FEB. 8

The Election Commission of India has appointed three more senior officers to Tamil Nadu, on Additional CEO and two Joint CEOs. Shankar Lal Kumavat is the additional CEO and H S Srikanth is joint CEO and P Aravindan joint CEO (SVEEP)

DT Next
Dated: 09-02-2024

# EC appoints spl CEOs to ensure smooth LS polls

**CHENNAI:** The Election Commission of India appointed an additional chief electoral officer (CEO) and two joint CEOs for Tamil Nadu in view of the upcoming Lok Sabha polls. Shankar Lal Kumawat has been appointed as additional CEO, while HS Srikanth and P Aravindan have been appointed as the joint CEOs for Tamil Nadu, said Principal Secretary of ECI Rahul Sharma in a recent communication to Chief Secretary of Tamil Nadu Shiv Das Meena. The appointments have been made based on the request from the state, which had asked for additional officers to assist Chief Electoral Officer of TN Satyabrata Sahoo for the smooth conduct of the LS polls.

The Hindu (Tamil)
Dated: 09.02.2024

மக்களவை தேர்தல் பணிக்காக

# தமிழக தேர்தல் துறையில் கூடுதல் அதிகாரிகள் நியமனம்

சென்னை

மக்களவை தேர்தல் பணிக்காக, தமிழக தேர்தல் துறையில் ஒரு கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி, 2 இணை தலைமை தேர்தல் அதிகாரிகளை நியமிக்க தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

மக்களவை தேர்தலுக்கான ஆயத்த பணிகளில் இந்திய தேர்தல் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மாநிலங்களில் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்து வருகிறது. அந்த வகையில், தேர்தல் ஆணைய துணை ஆணையர் அஜய் பாது, தேர்தல் ஆணைய செயலர் மல்லே மாலிக் ஆகியோர் சென்னையில் கடந்த 6, 7-ம் தேதிகளில் ஆலோசனை நடத்தினர். முதல் நாளில் காவல், வருமானவரி, வருவாய், புலனாய்வு, சுங்கத் துறை, மத்திய பாதுகாப்பு படையினருடனும் 2-வது நாளில், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினர். தலைமை தேர்தல் ஆணையர் தலைமையில் தமிழகத்தில் விரைவில் ஆய்வு நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

இந்த சூழலில், மக்களவை தேர்தல் நேரத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு உதவுவதற்காக 3 அதிகாரிகளை நியமிப்பது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இதை ஏற்று, அதிகாரிகளை நியமிக்க தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து தமிழக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனாவுக்கு தேர்தல் ஆணைய செயலர் ராகுல் சர்மா கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில், 'தமிழக கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாக ஐஏஎஸ் அதிகாரியான சங்கர்லால் குமாவத், இணை தலைமை தேர்தல் அதிகாரிகளாக தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு ஐஏஎஸ் அதிகாரி ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், வாக்காளர் விழிப்புணர்வு பிரிவுக்கு பி.அரவிந்தன் ஆகியோரை நியமிக்க தேர்தல் ஆணையம் அனுமதி அளிக்கிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Daily Thanthi
Dated: 09.02.2024

# தமிழகத்திற்கு கூடுதலாக தேர்தல் அதிகாரிகள் நியமனம்

சென்னை, பிப்.9-

நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் 2 மாதங்களில் நடைபெற உள்ளது. தமிழகத்தில் தேர்தல் பணிகளை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு துரிதப்படுத்தியுள்ளார். தேர்தலை செம்மையாக நடத்துவதற்கு கூடுதல் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் கமிஷனுக்கு சத்யபிரத சாகு கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில் தமிழக தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனாவுக்கு இந்திய தேர்தல் கமிஷனின் முதன்மைச் செயலாளர் கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான சங்கர்லால் குமாவத், தமிழ்நாட்டின் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாகவும்; ஸ்ரீகாந்த், இணை தலைமை தேர்தல் அதிகாரியாகவும் (ஐ.டி.) நியமிக்கப்படுகின்றனர்.

அரவிந்தன், இணை தலைமை தேர்தல் அதிகாரியாக (ஸ்வீப் திட்டம்) நியமிக்கப்படுகிறார். அவர்களின் நியமனத்தை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Dinamalar
Dated: 09.02.2024

# தேர்தல் பணிக்கு கூடுதல் அதிகாரிகள்

சென்னை, பிப். 9-

லோக்சபா தேர்தலையொட்டி, கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் இணை தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

லோக்சபா தேர்தல் பணிக்காக, கூடுதல் அலுவலர்களை நியமிக்க, தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது. அதன்படி தமிழகத்தில், தலைமை தேர்தல் கமிஷனருக்கு உதவி செய்ய, கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் இரண்டு இணை தலைமை தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

சென்னை மாநகராட்சி சுகாதார பிரிவு கூடுதல் கமிஷனராகப் பணியாற்றி வந்த சங்கர்லால் குமாவத், தமிழக இணை தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கூடுதல் கலெக்டராக பணிபுரிந்த ஸ்ரீகாந்த், தகவல் தொழில்நுட்ப பணிகளை கவனிப்பதற்காக, இணை தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல, மாவட்ட வருவாய் அலுவலர் அரவிந்தன், தேர்தல் விழிப்புணர்வு பணிக்காக, இணை தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டு உள்ளார். இதற்கான உத்தரவை, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா பிறப்பித்து உள்ளார்.

Election Commission of India appointed Additional CEO and Joint CEO to Tamil Nadu to ensure free and fair polling ~~for~~ General Elections to Lok Sabha, 2024.